யாழ்ப்பாணம் - இணுவையூர்

# திரு. கந்தையா சங்கரசிவம்

ஆசிரியர், மிருதங்க வித்துவான்

கொம்மந்தறை - வல்வெட்டித்துறை



அவர்களின்

# ஞாபகார்த்த மலர்

17 - 6 - 1988

உ



திருவாளர்

# கந்தையா சங்கரசிவம் ஆசிரியர்

மிருதங்க வித்துவான் அவர்கள்

வையத்துள் அறிமுகம்

13-6-1939

வானுறையும் தெய்வத்துள் சங்கமம்

18-05-1988

# அமரர் திரு. சு. சங்கரசிவம்
# ஆசிரியர் மிருதங்கவித்துவான்

## திதி நிர்ணய வெண்பா

வருடம் விபவ வுறும் வைகாசி பூர்வதி
திருதியை சேர் மிருக சீரிடம் மருஷ் செவ்வாய்
மிருதங்கம் நூலாசான் சங்கரசிவம் சீர்
மருவு சிவம் தான் சேர்ந்தார் மன்

## வாழ்வுச்சீர்

செந்தமிழ் வளர்த்த சீரியாழ்ப்பாணம்
    திகழ் நடு நகரெனப் பொலியும்
அந்தமில் கல்வி செல்வமாக இணுவை
    அற்புத நகரில் முருகன்
செந்தளிப் பதங்கள் முப்பொழுதினிலும்
    முறை வழிபாடு செய் புனிதன்
தந்தை நாராயண பிள்ளைதன் மைந்தனி
    தவமலி கந்தையா பிள்ளை

அன்புறு மனையாள் அன்னப்பிள்ளைக்கும்
    அருந்தவத்தால் வரும் மக்கள்
இன்புற உதித்த ஆச்சியம்மா பின்
    இளையவர் சிவசுப்பிரமணியம்
முன்புறும் விதானை நல்லையா தம்பி
    முறைபயில் ''மிருதங்கம்'' நூல்செய்
மன்புகழ் பயிற்சி பெற்ற நல்லாசான்
    சங்கரசிவம் கலைவல்லான்.

இளங்கலைமாணி அதிபராய் உயர்ந்த
    இன்குகனேஸ் வரியம்மை
களங்கமில் சிந்தை படைத்த ஆசிரியை
    பராசக்தி தனக் கன்பார் தம்பி
வளம் பொலி உமாதேவிக்கு நல்லண்ணன்
    மாணிபுறும் ''மிருதங்கம் எனும் நூல்

உளம் கொள அமைத்த உத்தமக் கலைஞன்
உயர் புகழ்ச் சங்கர சிவம் மன்!

மாண்புறும் அமைச்சர் உயர் கல்வி மேதை
கௌரவ சு. நடேசபிள்ளை
எண்புகழ் இணுவைப் பண்டிதர் இருவர்
சகோதரர் வேண்டு கோட்கிசைந்து
சேண் பொலி புசல்லாவப் பதி வளரும்
சரஸ்வதி வித்தியாலயத்தில்
ஆண்டகை அமரர் சங்கரசிவத்தை
ஆசிரியராய் நியமித்தார்.

அன்னபேரறிஞர் அறிவுரை கொண்டு
அருந்தமிழ் உயர் பயிற்சி பெற்று
தன்னுறு முயற்சி யொன்றினால் கலைஞர்
அம்பல வாணர் சின்னராசா
மன்னுசீர் இராம நாதனென்று இசைசேர்
மிருதங்க வித்துவான் கள்தம்
இன்னினிதான சீடனாய்ப் பயின்று
மிருதங்க வித்துவான் ஆனார்.

ஆரம்பக் கல்வி அணி நகர் இணுவை
அறிஞர் ஆன்றோர் தாபித்த
ஏர்பம்பும் இணுவை சைவப்பிரகாச
வித்தியாசாலையிற் பயின்று
சீர்பம்பும் அறிஞர் பண்டிதர் இருவர்
துணைகொண்டு கலைஞரால் வளர்ந்து
பேர்பம்பும் கலைஞர் சங்கரசிவம் பின்
பெரும்புகழாளனாய் மிளிர்ந்தார்.

அன்புறு மூத்த சகோதரியான
ஆச்சியம்மா புகழ் படைத்த
இன்ப சோதிடராம் திரு செல்வத்துரையை
இயல் மணம் புரிந் தினி துறைவார்
பின்புறு குகனேஸ்வரி உடுப்பிட்டி
பிறந்த சீர்துரை சாமி தன்னை



அன்பு மணந்து இல்லற வாழ்வில்
அருளறம் சிறந்து வாழ இன்னார்.

திருமலி இளைய சகோதரியான
ஆசிரியை பராசக்தி
பெருமகன் சீரார் சந்திரசேகரியை
பீடுற மணந்தினி துறைவார்
திருமகள் அனைய உடுப்பிட்டி வாழ்ந்த
கந்தையா மகள் சகுந்தலையைத்
திருமணம் புரிந்த சங்கரசிவமும்
செந்தூரன் மகனோடு சிறந்தார்.

உடன் பிறப்பினராம் சிவசுப்பிரமணியம்
புகையிரத நிலைய நல்லதிபர்
மடமுதல் நான்கு குணங்களும் நிறைந்த
மாவிட்டபுர நகர் வந்த
திருமகள் நிகராம இரத்தினம் தன்னை
திருமணம் புரிந்து கொண்டார்
மடமயிலனைய உமாதேவி நீர்வைத்
தவராசா தனைமணம் புரிந்தார்.

கற்றவர் மதிக்கும் கலைநலப் பொலிவும்
கண்ணியம், கடமை, கட்டுப்பாடு
பொற்புறு பொறுமை தண்ணளி சாந்தம்
புலமை நல்லறிஞர் தம் ஆசி
நற்றவ வாழ்வு இணுவை வாழ்முருகன்
நல்லடி மறவாத சிந்தை
கற்புறு மனைவி மகன் உயிர்க்குயிராய்
கவின் பெற்றார் சங்கரசிவம் மன்!

உடுப்பிட்டி கம்பர் மலைநகர் வளரும்
உயர்மகா வித்தியாலயத்திலும்
எடுத்த தன்சேவை இனிதுற நடாத்தி
இணுவைதான் பிறந்த மனை எனவே
அடுத்துறு பத்தாண்டாசிரிய சேவை
ஆற்றவே மனம் வைத்தார் வாழ்வை

விடுத்து விண்ணவர்க்கு விருந்தினரானார்
மேன்மைசேர் சங்கர சிவம் மன்!

ஈதலோ டிசைகொள் வாழ்க்கையே வாழ்க்கை
இதமுறு சங்கர சிவமும்
போதமார் பருத்திப் பிள்ளையார் தனக்கு
இடும்ப வாகனமும் கலைஞர்க்கு
நாதமார் நல்ல மிருதங்க நூலும்
நண்மனை மகனுக்கு அன்பும்
ஏதமில் உற்றார் உறவினர் நண்பர்க்கு
இதயத் துயரமும் வைத்தார்.

தந்தையார் தனக்கும் சிறிய தாயான
அன்னையாம் பாக்கியம் தனக்கும்
அந்தமில் சிறப்பின் அருஞ் சகோதரர்க்கும்
அருமையாம் அத்தான் மைத்துனர்க்கும்
பந்தமும் உழுவல் அன்புளம் வைத்து
படைத்திடும் கருணைசேர் இணுவைக்
கந்தனின் கழல்கள் அநுதினம் சூடிக்
கயிலைமா மலையடைந்தார் மன்

## தேற்றம்

கரும்பயிர் உயிர்கள் பிறந்து வாழ்ந்திருந்து
தடைமுறை சாம்பராய்க் கழிவர்
இருப்பவை செய்த புண்ணியம் பாவம்
இனியதோர் புகழ்க் கிலக்கியமாய்
மருக் கொழுந்தாகி மனையறம் புரிந்து
மருவிய சுற்றம் மித்திரர்க்கு
விருப்பமார் உயிர்க்குயிரென வாழ்ந்த
உத்தமன் பெறுக ஓம் சாந்தி



# அமரர் திரு. க. சங்கரசிவம் அவர்களுக்கு எனது அஞ்சலி யுரை

அமரர் திரு. க. சங்கரசிவம் அண்மையில் அமரத்துவம் அடைந்தமை இசை உலகிற்குப் பெரிய இழப்பாகும். சிறந்த ஆசிரியராகவும், மிருதங்க வித்துவானாகவும் விளங்கிய அமரர் தமது தனித்துவத்தினாலும் மனித நற்பண்புகளினாலும் யாவரையும் வசீகரிக்கும் இயல்பினராகவும் விளங்கினார்.

இசை தெய்வீகக் கலை. அதனை யாசிப்பவர்களும், ஆராதிப்பவர்களும் ஆத்மீகப் பண்புகள் மிகுந்தவர்களாக இருப்பர். அமரர் அவர்களும் தனது துறையை ஆராதித்த வந்தவர். தம்மைப் போலப் பல கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்று அவாவுற்றிருந்தவர். அவரின் எதிர்பாராத மறைவு நமது துர்ப்பாக்கியமே.

வட இலங்கை சங்கீத சபை கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இசைப்பணிகள் புரிந்து வருகின்றது. இதனை வழிப்படுத்துவதற்கும், பணிகளைச் செயற்படுத்துவதற்கும் பல கலைஞர்கள் முன்னின்று உழைத்து வருகின்றார்கள். அமரர் சங்கரசிவம் அவர்களும் இந்த வகையில் சபையின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு குறிப்பிட ப்பட வேண்டியது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

கல்வித்திணைக்களம்.
வடமாநிலம்—யாழ்ப்பாணம்

கு. சோமசுந்தரம்
பிரதம கல்வியதிகாரி
உபதலைவர்
வட இலங்கை சங்கீத சபை.

உ

ஸ்ரீ ராம ஜயம்

அ. நா. சோமஸ்கந்த சர்மா
மிருதங்க விரிவுரையாளர்
இராமநாதன் நுண்கலைக் கழகம்
யாழ்/பல்கலைக்கழகம்
சுன்னுகம்.

மானசீக நண்பர் திரு. சங்கரசிவம் ஆசிரியர் அவர்கள் காலமாகிவிட்டார் என்னும் செய்திஐயக் கேட்டு ஒரு நிமிடம் அளவில் சிந்தனை எங்கோ சென்றது திரும்பவும் இச்செய்தி பற்றி பேசியவர்களுடன் விளக்கமாக வினவினேன் உண்மை தெரிந்தது இச்செய்தியானது எனக்கு மட்டுமல்ல அவர் குடும்பத்திற்கு மட்டுமல்ல மிருதங்க சங்கீத உலகில் யாவருக்கும வியப்பையும் பெரும் துக்கத்தையும் அளிக்கின்றது.

திரு சங்கரசிவம் அவர்கள் இசைச் சேவை மாணவ ஆசிரியர் பரம்பரையில் பொன்னெழுத்தக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்ருகும். இவர் சகலருடனும் அன்பாயும் ஆதரவாயும் பழகும் இயல்புடையவர் அறிவுடையோரிடத்தும் பெரும் பக்தி கொண்டவர். இதுபோலவே அவர் கலைச் சேவையும், வாய்ப்பாட்டு, பண்ணிசை, என்பவற்றிலும் அதி சிரத்தையாகக் கற்றுக்கொண்டவா.

முக்கியமாக இவர் மிருதங்கத்திற்கென ' மிருதங்கம்'' என்னும் நூலை மிருதங்க ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவும் வகையில் வெளியிட்ட பெருமை இவருக்கே உரியது. இதுமட்டுமன்றி வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகளுக்கும் இராமநாதன் நுண்கலைப் பல்கலைக்கழகத்தின் மிருதங்கத்தேர்வுக்கும் பரீட்சகராக சேவை செய்தார். அத்துடன் வட இலங்கைச் சங்கீத சபை வினுப்பத்திர மீளாய்வுக்குழுவிலும் ஐந்து வருடங்கள் சேவை செய்தவர்.

இவர் என்னுடன் 16 வருடங்களாக இசை சம்பந்தமாகப்பழகியவர். இவ்வாண்டு 16 — 20/4/88 வரை வட இலங்கையின் மிருதங்கப் பரீட்சகராக என்னுடன் கடமை புரிந்தார். மேலும் 9/5/88 யாழ்/பல்கலைக்கழக் இசைக்கலை மணிப் பரீட்சைக்கும் மிருதங்கப் பரீட்சைக்கும் மிருதங்கப்பரீட்சகராக சேவை செய்தார். அடுத்த 10 நாட்களுக்குள் 18/5/88 இவர் காலமாகிவிட்டார். என்பது இன்றும் நம்ப முடியாததும் நெஞ்சைபுருக்கும் சம்பவமாகவே தெரிகிறது இன்னுமொரு சிந்தனை 1977ஆம் ஆண்டு தொடக்கம் பிரதம பரிசோதகராக கடமை புரிந்த சங்கரசிவம் அவர்கள் இம்முறை என்னுடன் பரீட்சகராக வரவேண்டும் என்ற ஒரே விருப்புடன் தனது பிரதம பரீட்சகர் பதவியை விட்டு என்னுடன் உதவிப் பரிசோதகராகக் கடமை புரிந்தார். இது அவரது நீண்ட நாள் சிந்தனை போலும் தெரிகிறது. இது அவரின் கலைத்தன்மையைப் பிரதிபலிக்கிறது. இவர் உடம்பு மறைந்தாலும் இவர் புகழ் என்றும் நிலைக்கும் என்பது எனது நம்பிக்கை.



நண்பரின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிருேம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

---

## சாந்தகுணசீலன் - சங்கீதப்பிரியன் - மிருதங்க வித்துவான் ஸ்ரீசங்கரசிவம் வியோகமெய்திய ஞான்று

## வழங்கிய அநுதாபவுரை

இணுவில் நாராயணபிள்ளை கந்தையாவும் அன்னப்பிள்ளையும் செய்த நற்றவத்தால் தோன்றிய பிள்ளைகள் யாவரும் இணுவில் ஸ்ரீ சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றனர். இவர்களுள் காலஞ் சென்ற ஸ்ரீ சங்கரசிவமும் ஒருவர். இரட்டையருள் ஒருவர். எம்மால் வித்தியாரம்பம் செய்யப்பெற்றுச் சகல கலைகளிலும் வல்லுநராகத் திகழ்ந்தார். தேவாரபாராயணப் பிரியர், சங்கீதக்கலாவிநோதன் மிருதங்க வித்துவான். பாடசாலையில் கற்ற ஞான்று அவ்வக் காலங்களில் நடைபெற்ற பெற்ருேர் தினவிழாக்களில் பங்குபற்றி யாவராலும் பராட்டப்பெற்றவர். சிறந்த நடிகர் அவருடைய அருமருந்தன்ன மைந்தனுக்கும் வித்தியாரம்பம் செய்துள்ளேன். பிள்ளை நன்கு கற்று வருகின்ருன் என்பதைக் கேள்வியுற்று மிக மகிழ்ச்சியடைந்தேன். அந்தோ பச்சிளங்குழந்தையைக் கைவிட்டுத் தந்தை சங்கரசிவம் பிரிந்தார். ஆற்ருெணுத்துயரால் அல்லலுறும் குடும்பத்தினர்க்கு ஆதரவளிப்பவன் இறைவனே! ''நீரில் எழுத்தாகும் யாக்கை'' என்பதை உணர்ந்தோ சங்கரசிவம் சென்ருய் எங்குற்ருய். சங்கரன்தாள் சேர்ந்தான் சங்கரசிவம் என நினைஇ ஆறுதலடைவோமாக. அவர்கள் குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிக்கின்றேன்.

அ. வை. கதிர்காமநாதன்
ஓய்வு பெற்ற அதிபர் யாழ்/சை.பி.ம.வி.
இணுவில்

சிவமயம்

# சங்கர சிவமே சென்றனையோ!

## கட்டளைக் கலித்துறை

1. இணுவை உதித்து இவண்புகுந் தில்லற இன்புதுய்த்தே
நணுகு முறையினில் இன்கலை பற்பல நன்கு தந்தே
அணுகுஞ்சீர் மாணவர் உள்ளம் மகிழ்ப்பணி ஆற்றிநின்றோய்
துணுக்குற்றே உள்ளம் துயருளந் தேங்கத் துறந்தென்னே!

2. இலய, லளிதக் கலைகள் பலவும் இலங்க நின்றோய்
கலையின்பம் துய்த்தனை அவ்வின்பம் சிறார்க்குமாய்க்
கனிந்துதந்தோய்
நிலவுல கத்தினில் நின்பணி தன்னை நிறைவு செய்தே
மலர்தரு புகழுடன் இப்புவிக் காக்கி மறைந்ததென்னே

3. செந்தூரும் நின்துணையும் ஆழ்துயர் மூழ்கியே தேம்பவிட்டே
மன்னுநின் பண்பும் பணிவும் எலாமும் மனத்திருத்திச்
சின்மயா னந்த சிவனார் பதமலர் சிந்தையாக
இன்னே எமையெலாம் ஆழ்துயர் விட்டே இகந்ததென்னே!

4. அகட விகடமாய் ஆசான்மார் தம்மின் அயர்வு போக்கித்
தகவுடன் ஆசாற் பணியினில் நின்ற தனித்துவத்தோய்
இகவாழ்வில் உங்கள்பால் உற்றநல் இன்பம் இனிவருமோ
ஜெகதலம் தேம்பி இரங்க விடுத்தனை சென்றதென்னே

அதிபர், கம்பர்மலை அ. த. க. பாடசாலை
கொம்மாந்துறை.
வல்வெட்டித்துறை.



மிருதங்க அரங்கேற்றத்தின்போது
திரு க சங்கரசிவம் அவர்கள்
உயர்திரு தி. மாணிக்கவாசகர் (கல்விப் பணிப்பாளர் வடமாநிலம்,)
அவர்களால் மாலை அணிவித்து கௌரவிக்கும் காட்சி



திரு. க. சங்கரசிவம் அவர்களின் மிருதங்க அரங்கேற்றக் காட்சி

சிவமயம்

# கலைபலவல்ல சங்கர சிவனார்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

இது வள்ளுவன் வாக்கு.

வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாய் அமைந்தவர் ஆசிரியர் திரு. சங்கரசிவம் அவர்கள்.

அன்னார் இல்லற வாழ்வில் மாத்திரமன்றி, ஆசிரியப் பணியிலும் ஓர் எடுத்துக் காட்டாக இலங்கியவர். பண்ணும் பரதமும் கல்வியும் ஒருங்கமைவு பெற்ற பண்பாட்டாளர்.

தம்மிடத்தே அமைவு பெற்றிருந்த கலையின்பத்தைப் பாலர் முதல் சிரேஷ்ட மாணவர் வரை அனைவோர்க்கும் வழங்குவோராய் இசை, நடனம், நாட்டியம், நாடகம் அனைத்தையும் பயிற்றியவர். அன்னாரின் வல்லபத்தால் மாணவர் பற்பலர் இசை, நடன, நாடக போட்டிகளிற் பங்குபற்றி வெற்றிவாகை சூடினர். அன்னாரின் பணியால் மெய்வல்லுநர்ப் போட்டி, சமயப்போட்டிகளிலும் வெற்றியீட்டினர்.

ஆசிரிய ஒன்றியத்தின் செயலாளர் பதவியைப் பல்லாண்டு காலம் ஏற்றுப் பாடசாலைப் பணிகளில் ஆசிரியர் பங்களிப்பினை வலுப்படுத்தியவர் புன்சிரிப்புத் தவழும் அன்னாரின் மலர்முகம், ஹாஸ்யச் சுவையுடனான அன்னாரின் பேச்சு, குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் உபகதைகள் என்பவற்றை இனி நாம் எங்கு காணப் போகின்றோம்!

அவர் நோற்காத நோன்பில்லை; தரிசிக்காத தலமில்லை. அவற்றின் பேறு போலும் அன்னாரை இறைவனின் பதமலருக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

அன்னாரின் மறைவு எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரின்

அன்புத் துணைவியாரும் ஏக புத்திரனும் மன அமைதி பெறவும் சிறப்புற வாழவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

இங்ஙனம்
ஆசிரியர் ஒன்றியம்
யா/ கம்பர்மலை அரசினர் தமிழ்க்
கலவன் பாடசாலை,
கொம்மந்துறை,
வல்வெட்டித்துறை.

பொன்னாலைக் கோவிலடி
சுளிபுரம்
6. 6. 88

# இரங்கலுரை

கண்ணியம் மிக்க மதிப்புக்குரிய நண்பர் திரு.க. சங்கரசிவம் அவர்களது அமரத்துவம் பற்றிய செய்தி பத்திரிகையில் வெளியானது அறிந்து நம்பமுடியவில்லை. அதிர்ச்சியடைந்தேன்.

1972ம் ஆண்டு இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அவரது மிருதங்கம் அரங்கேற்றம் நடைபெற்ற காலம் முதல் அவரோடு மிகுந்த நட்புடன் பழகினேன். 1979ல் அவரது மிருதங்கம் என்னும் நூல் வெளியீட்டின் போதும் அதிற் கலந்து கொண்டேன். அன்று நான் குமரகுருபரர் நீதி நெறி விளக்கத்தில் கூறிய "மலரவன் வண்டமிளோர்க் கொவ்வான்" என்ற வாக்கியத்தைக் கூறினேன். அவரைப் படைத்த பிரமனைவிட இலங்கையில் எவருமே செய்ய முடியாத பெரு முயற்சியில் ஆக்கிய மிருதங்கம் என்னும் நூலை படைத்த இவர் பெரியவராகிறார்.

நற்பண்பும் அறிவாற்றலும் மிக்க இவர் இச்சிறிய வயதில் இறையடி சேர்ந்தது இசையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இவரது குடும்பத்தினருக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்து ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை
கல்வி அதிகாரி (சங்கீதம்)



யா/ பல்கலைக்கழகம்
இராமநாதன் நுண்கலைக்கழகம்
சுன்னாகம்.

# சங்கரின் சங்கமம்

அன்பு அறிவடக்கம் மிக்க பண்பாளர் திரு க. சங்கரசிவம் மிருதங்க வித்துவான் அவர்கள் திடீரென இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் மிக்க துயரமும் அடைந்தேன்.

அவர் நமது நீண்டகால நெருங்கிய நண்பர். அண்மையில் தமிழகம் சென்றிருந்த வேளை எமது பல்கலைக்கழக மிருதங்கப் பேராசிரியர் திரு. ஸி. வி. வீருசாமிப்பிள்ளை அவர்களைச் சந்தித்தபோது திரு சங்கர் அவர்களைப் பிள்ளை அவர்கள் மெச்சிப் பேசியது எனக்கு மிக்க பெருமையாக இருந்தது.

வட இலங்கைச் சங்கீத சபையுடன் மிக்க நெருங்கிய தொடர்பும் செயற்பாடும் மிக்க சங்கர் எமது நுண்கலைக்கழக வெளிநிலைப் பரீட்சகராகவும் நீண்டகாலம் பணி புரிந்துள்ளார். மிருதங்கத் துறையைப் பொறுத்து ஈழத்து வரலாற்றில் சங்கரின் இடம் காலத்தால் அழியாதபடி அவரது நூல் ஈழத்து மிருதங்க வளர்ச்சியின் முதல் நூல் என்ற வகையில் அமைந்து விட்டது. என்றும் இனிய சுபாவம் மிக்க சங்கர் சங்கரனுடன் சங்கமமாகிவிட்டார். வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் நாமம்! என்றும் அவர் இணையில்லாப் பேரானந்த வாழ்வு பெற வேண்டுமென அம்பிகை திருவடிகளைச் சிந்திக்கிறேன்.

1-6-88.

நா. வி. நவரத்தினம்
இசை விரிவுரையாளர்
யா/ பல்கலைக்கழகம்
உதவிச்செயலாளர்
வ. இ. ச. சபை
கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

## இயலிசைவாரிதி, நடன ஸாகித்ய கலாவேந்தன்
## இணுவையூர் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்
அவர்கள் வழங்கிய

# இரங்கலுரை

கலைகளில் வல்ல இணுவையூர் தந்த ஒரு கலை முத்து ஸ்ரீ சங்கர சிவம் அவர்கள் தாளலய மிருதங்க வாத்தியத்தில் போதிய ஆராய்வு ஞானமும் பயிற்சி ஞானமும் பெற்றவர். இவர் இனிய சுபாவம் அன்பொழுக பண்பொழுக இனிய பண்பு அவரை ஒரு மேதாவி என மதிக்கத்தக்க அளவுக்கு உயர்த்தியிருந்தது. குழந்தைப்பராயம் முதற்கொண்டு என்னுடன் மிக நெருங்கிப் பழகிய ஸ்ரீ சங்கரசிவம் அவர்களுடைய பிரிவு எனக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் கொடுத்துள்ளது. அமரத்துவம் ஆவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் எனது இல்லத்திற்கு வந்திருந்தார். நான் இயற்றிய 35 தாள 175 தாள உருப்படிகளையும், 72 மேளகர்த்தா ராக உருப் படிகளையும் பார்த்து வியந்து நின்ற சங்கரசிவம் அவர்கள் இந் நூல்கள் அச்சேற்றி கலையுலகத்திற்கு சமர்ப்பித்து உதவும்படி கேட் டுக்கொண்டார். ஒரு கலைஞன் தனது படைப்புகளை மற்றவர்கள் அனுபவித்து ரசிக்கும்போது அக்கலைஞன் ஆனந்தம் அடைகிறான். என்னுடைய சாஹித்தியங்களை ஸ்ரீ சங்கரசிவம் அவர்கள் அணுவணு வாக ரசித்து அனுபவித்த காட்சி — அவர்கள் கூறிய வார்த்தை கள் "உங்கள் கலையுலக சாதனைகள் இந்த உலகுள்ளவரை இருக் கும்" என்பதுதான்.

ஒரு கலைஞனின் கலா சிருஷ்டிகளைப் பாராட்டி வாழ்த்திய பெரும் கலைஞன் அன்பின் சிகரம், ஸ்ரீ சங்கரசிவம் அவர்கள் இன்று எம் மிடம் இல்லை.

அவனுடைய பிரிவு கலையுலகத்திற்கு ஒரு பெரிய இழப்பு ஈடு செய்ய முடியாத நஷ்டம் எங்கு கண்டாலும் இனிமையாகக் குசலம் விசாரிக்கும் பண்பு மகத்தானது.

அவர் எழுதிய "மிருதங்கம் சுருக்க விளக்கம்" என்னும் நூல் ஆரம்ப மிருதங்கம் பயிலுனர்க்கு பேருதவியாக இருக்கிறது கண்ட



சாபு மிஸ்ர சாபு தாளங்களில் காணும் தாள நுணுக்கங்களை மற் றும் மிருதங்க அமைப்பு, தோற்றம் ஆகியவைகளைப் பற்றி அவர் குறிப்பிட்ட விளக்கமும் ஸப்த தாளங்களில் மிருதங்கம் பயில்பவ ருக்கு மனதிலே நிலை நிறுத்தக் கூடிய வகையில் மனோதத்துவ ரீதி யில் சொற்கட்டுக்களை அமைத்து யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தாள, லய, அங்க அடையாளங்களுடன் அந்நூலை அவர் தெளிவாகக் காட்டியுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மிருதங்க வித்துவான் ஸி.வி.வீருசா மிப்பிள்ளை அவர்கள் இவருடைய சாதுரியமான சாதனையைப்பாராட் டியுள்ளார். மேலும் மிருதங்கப் பேராசிரியர் இராமநாதன் அவர் களும் விரிவுரையாளர்களும் வாழ்த்தியுள்ளனர். இசையுலகிற்குப் பல ஆண்டுகளாக அரும்பணியாற்றிய சங்கரசிவம் அவர்கள் எம்மிடம் இன்று இல்லை. இணுவிற் கிராமத்திற்கே நற்பெயர் சூட்டித்தந்த ஸ்ரீசங்கரசிவத்தின் பிரிவு இணுவில் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். நல்ல பண்பான, அன்பான, தூய்மையான, இரக்க சுபாவமுள்ள ஓர் இனிய நண்பனை இழந்துவிட்டேன். அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று நந்திகேஸ்வரனையும், கூத்தப்பெருமானையும் பிரார்த் திக்கின்றேன்.

நடன விரிவுரையாளர் — இப்படிக்கு
ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை — ந. வீரமணி ஐயர்
கோப்பாய் — நாட்டிய ஸாகித்யவேந்தன்

18 - 05 - 88இல்
இறைவனடி எய்திய இணுவையூர்
திரு. கந்தையா சங்கரசிவத்தை யொட்டிய

# இரங்கற் செய்தி

திரு. சங்கரசிவம் அவர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் பல வருடங்களாக எனக்குத் தெரியும். அவர் இணுவையூரில் ஓர் சிறந்த குடும்பத்தில் பிறந்தார். அவருடைய மறைவு எனக்கு அதிர்ச்சியையும், கவலையையும் தந்துள்ளது.

இவருடன் நான் நெருங்கிப் பழகிய காலம் வவுனியா கச்சேரி யில் நாம் கடமையாற்றிய பொழுதே. அப்பொழுது அவர் வவுனி

யாழில் ஆசிரியராகப் பணி புரிந்தார். 1972ம் ஆண்டு வவுனியா திறந்தவெளி அரங்கில் கச்சேரி அலுவலர்கள் பங்குபற்றி நிறைவேற்றிய ''வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்'' என்னும் சங்கீத கதாப்பிரசங்க கலைநிகழ்ச்சிக்கு சங்கீதத் துறையிலும், மிருதங்கத் துறையிலும், பேருதவியைப் புரிந்தார். இவருடைய பங்களிப்பால் அந்நிகழ்ச்சி பலரினதும் பாராட்டைப் பெற்றது. இது மட்டுமன்றி வவுனியாக் கச்சேரியில் வாணி விழாக் கலைநிகழ்ச்சிகள் நடாத்தப்படும் காலங்களில் இவர் எங்களுடன் இணைந்து தேவார தோத்திரங்கள் பாடி, மிருதங்கம் வாசித்து சிறப்பான முறையில் நிகழ்ச்சிகளை நடாத்தி முடிப்பதற்கு பேருதவி புரிந்திருக்கின்றார்.

இணுவையூர் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடந்தேறிய இவருடைய மிருதங்க அரங்கேற்ற விழாவில் பல பெரியார்களுடன் நானும் ஒருவராகப் பங்குபற்றி அவருடைய வித்துவத்தன்மையை எல்லோர்க்கும் விளங்க வைக்க வேண்டும் என்றும் இணுவில் கிராமத்தின் கலை வளர்ச்சிக்கு இவருடைய பங்களிப்பு மெருகூட்ட வேண்டுமென்றும் வாழ்த்தினேன்.

மிருதங்கக் கலையில் வல்லுனரான இவர்மிருதங்கப் பயிற்சிக்கு உதவும் படியான ஒரு நூலையும் 1979ம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்நூல் மிருதங்கம் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பிரயோசனப்படக்கூடியதாக இருக்கின்றது. சங்கீதத் துறையிலும், மிருதங்கத் துறையிலும், இவர் மாணவருக்கு ஆற்றிய அரும் பெரும் சேவை மறக்க முடியாதது.

இவரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி, மக்கள், சுற்றத்தார், நண்பர்கள் ஆகியவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக. அமரர் சங்கரசிவத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக!

இப்படிக்கு
கு. கிட்ணர்

(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபரும், நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும்)



யா/ இணுவில்
சை. பி. ம. வி
இணுவில்
8-6-88

# சங்கரா உன்வதனமும் புன்னகையும் பார்த்திடல் என்றோ!

பாலனாய்ப் பள்ளி வந்தாய்
 பல்கலை கற்றாய் வீர
கோலமாம் குரு பணிந்து
 கொள்கையில் நடுவனானாய்
சீலமாம் சிவமே சங்கர்
 சீர் பெற சேவை செய்தாய்
காலமும் நீண்டதில்லை
 கடமையும் ஏற்று நின்றாய்

பண்டிதர் வித்து வான்கள்
 பண்புடை ஆசான் களோடு
எண்திசை புகழ் ஐந்தாண்டு
 எம்பள்ளி சேவை செய்தாய்
பண் இசை மிருதங்கத்தில்
 பாண்டித்திய மடைந்தாய் மேதை
மண்ணுமே பிறந்த மண்ணில்
 பிரிந்தது வியப்பே அன்றோ!

வார்த்தைகள் பகரும் போது
 வடியுமே பகிடி எல்லாம்
சேர்ந்தவர் தம்மைக் கண்டால் புதினம்
 சொல்லுவாய் சொக்கி நிற்பாய்
வார்த்தைகள் இல்லை இல்லை
 வதனமும் புன்னகையும்
பார்த்திடல் என்றோ! என்றோ!
 பாவிகள் ஆனோம்! ஆனோம்!

திருமதி அன்னலட்சுமி சின்னராசா
(ஆசிரியை)
இணுவில்

# பெரிய சின்னக்காவின் இரங்கற்பா

இணுவையம் பதியில் நல்ல தவத்தினிலுதித்த தம்பி
பேரிரு உருவந்தன்னிற் பெரியவனான தம்பி
மூவாண்டு பருவந்தன்னில் மாதாவை இழந்த சேயாய்,
மழலையில் திளைக்கும் வேளை மாமன்மார் மடியிலூர்ந்தாய்
மாற்றாரும் அன்புமிக்க மாமிமார் பாட்டியோடு
மிக்குயர் அன்பு கண்ட செல்வமே பெரியதம்பி!

அன்னை அன்பற்றோம் யாமும் அப்பனின் அன்பிலாழ்ந்தோம்
செம்மையாய் வளர்த்த அந்தச் செம்மலை மறைந்ததென்ன!
உற்றதாய் எனக்காத்த சிற்றன்னை கதறுகின்றாள்
வறுமையில் வாடும்போது வாழ்ந்திட்டோம் அன்பினாலே
பொறுமையாய்க் கல்வி கற்றோம் பொங்கியதின்பம் ஐயா!

கல்வியாம் புனையைக் கொண்டு கவின்பெறு கலைகள் கண்டாய்
நல்லற இன்பந்தன்னை நயந்தினிதளித்த தம்பி!
எண்ணருமுதவி தன்னை என்வாழ்வினிலீந்த செல்வா!
சொல்லரும் துணையை ஈந்து வாழ்விலீற் தாயுமானாய்
இல்லறம் பெற்றுவாழ என்னையே தொடர்ந்து நின்றாய்

மெல்லியாள் சகுந்தலைக்குத் துஷ்யந்த னானாய் வந்தாய்
புகழ்ந்திடு முலகந் தன்னிற் பொலிந்திட்ட இன்பமெல்லாம்
நயந்தினி தளித்த நம்பி, ஏற்றிய நாண்தான் எங்கே!
பன்னிரண் டாண்டு யாத்ததவமதாம் சேயை நீத்து
மண்ணினில் மாய்ந்தவாறு மறுப்பதற்கரிதோ ஐயா!

பகுதியாம் வடமராட்சி மிருதங்கம் சுவைத்து நிற்க
நாதத்தை எழுப்பிவிட்ட நம்பியே எங்கு சென்றாய்
மிருதங்க நாதமையா மிதந்திட்ட காற்றதனில்
ஒரு தங்கக் குணத்தின்மிக்க செம்மலே எங்கு சென்றாய்!
நாச்செற்று விக்குன் மேல்வா ராமுன் நல்வினை

நீக்கமற வாற்றிய சோதரா சகிப்போமோ?
பெறவரும் மகவோடு மனையாளைப் பெற்றோரைச்
சுற்றத்தை மறந்த மாயம்தானென்னே!
பொற்புடைச் சங்கரா, சிவனே உன்னாவி
அரனடி நண்ணட்டும்! நண்ணட்டும்! நண்ணட்டும்!

முல்லை/அ.த. பாடசாலை
முத்தையன்கட்டு
ஒட்டிசுட்டான்.

ஆக்கம்
திருமதி குகனேஸ்வரி துரைச்சாமி
அதிபர் B.A.(Lond)



# திருவாளர் க. சங்கரசிவம்
## ஆசிரியர், மிருதங்க வித்துவான்
## கல்வியுலகிற்கும் இசையுலகிற்கும் என புரிந்துள்ள தகமைகள்

1. ஒரு பயிற்றப்பட்ட முதலாம்தர ஆசிரியர்.
2. வட இலங்கைச் சங்கீத சபையின் மிருதங்க ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றவர்.
3. சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலும் ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சையிலும் கர்நாடக சங்கீதம் ஒரு பாடமாகச் சித்தியடைந்தவர்
4. இலங்கையில் முதன்முதலில் மிருதங்கப் (சுருக்க விளக்கம்) என்னும் நூலை 1979ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டவர்.
5. 1977ஆம் ஆண்டும் 1980ஆம் ஆண்டும் 1—6ஆம் பகுதி வரை உதவிப் பரீட்சகராகவிருந்தவர்.
6. 1981ஆம் ஆண்டில் இருந்து 1986ஆம் ஆண்டுவரை மிருதங்கப் பிரதம பரீட்சகராக விருந்தவர்.
7. 1982 — 83 – 84 — 86ஆம் ஆண்டுகளில் ஆசிரியர்பகுதி வினாப் பத்திரம் தயாரித்தும் திருத்துதலையும் மேற்கொண்டவர்.
8. 1985இலிருந்து வினாப்பத்திரங்களை மீளாய்வு செய்தவர்.
9. 1986இல் மிருதங்கப் பாடவிதானம் மீளாய்வு செய்தவர்.
10. யாழ். பல்கலைக் கழக, இராமநாதன் நுண்கலைப் பிரிவுக்கு மிருதங்கப் பரீட்சகராக 1982 — 1986 வரை சேவை புரிந்தவர்.
11. 1984இலும் 1986இலும் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு விரிவுரை நிகழ்த்தும் சங்கீத குழுவுக்கு ஒருவராக அழைக்கப்பட்டவர்.
12. யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவினால் 9 — 5 — 1988ஆம் திகதி அன்று நடத்தப்பட்ட இசைக் கலைமாணிப் பரீட்சையில் மிருதங்கப் பரீட்சகராக இருந்து இறுதி வரை தனது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்பணித்தவர். என்பதும் இங்கு முக்கியமாக அவரின் நாமம் இசை உலகில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதும் குறிப்பிடத்தக்கது.

# என் அருமைச் சகோதரரின் பேரின்பப் பெருவாழ்வு

சங்கரன் என்பது சுகத்லைதச் செய்பவன் என்பது பொருள். எல்லோருக்கும் சுகத்தைச் செய்த சங்கரன் சிவத்துடன் இரண்டறக் கலந்து பேரினபப் பெருவாழ்வு பெற்றுவிட்டான்.

எங்களை அதிர்ச்சியிலும் மீளாத் துயரிலும் ஆழ்த்தினாலும் அவரை சிவத்துடன் நெருங்கியிருக்கும் பேறு பெற வைத்தது அவரது மிருதங்க வித்துவத்தன்மையே.

மிருதங்கவித்துவானாகத் திகழ்ந்து புகழீட்டும் நேரத்தில் அவரது வித்துவத் தன்மையை கைலாயத்தில் கேட்க விரும்பிய சிவன் அவரை அழைத்து நந்தி யெம்பெருமானுடன் வைத்தாரோ தெரியவில்லை. அவருடைய பொன்விழாவை (50 வயது) 13 - 6 - 88 அன்று கொண்டாட வேண்டுமென்று அவரை அவசரஅவசரமாக அழைத்துவிட்டான் சிவன். தனது வாத்தியத்தை இசைத்து பொன்விழா கொண்டாடி நித்தியானந்தப் பேரின்பப் பெருவாழ்வு பெற்று இன்புற்றிருப்பாரர். என்று நினைத்து எங்கள் மனதைத் தேற்றி அவரது ஆன்மா அந்தப் பெருவாழ்வில் திளைத்து இருக்க வேண்டுமென்று எல்லமே வல்ல இணுவை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்னதான் சாந்தி சொன்னாலும் என் இரத்தத்திலிருந்து உடன்பிறந்த உன் பாகத்தைப் பிரித்தெடுக்க முடியாதடா. பெரியாம்பி சங்கரா நீ சிவத்துடன் ஐக்கியப்பட்டாய் என்பது உன் முகத்து ஒளி கூறியது கண்டோம். அதை நினைத்து ஆறுதலடைகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆக்கம்:

திருமதி பராசக்தி சந்திரசேகரி
(ஆசிரியை)
யாழ்/இணுவில் சை. பி. மகா. வி.,
இணுவில்.



# அன்பின் மாமாவுக்கு மருமக்களின் இதயம் நிறைந்த இரங்கலுரை

என்றும் எங்கள் அன்பிற்கும், பாசத்திற்கும் உறைவிடமாக விளங்கிய மாமாவே! எமையெல்லாம் துன்பக்கடலில் தவிக்கவிட்டு திடீரென மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டீர்களே! நீங்கள் எம்முடன் கலந்துரையாடும் போதுள்ள சொல்நுணுக்கங்களையும் நகைச்சுவை பொருந்திய புதினங்களையும் இனிக்கேட்கும் வாய்ப்பையும் பறித்து விட்டீர்களே உங்களைப் போன்று இனிமையாகப் பழகுவதற்கும், பேசுவதற்கும் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதென்றால் அது ஓர் இயலாத காரியமாகும். கலைவல்லுனர்களின் வாழ்க்கைக்காலம் மிகவும் குறைவு என்று நீங்கள் தானே அடிக்கடி கூறுவீர்கள் அதனைத் தற்போது சொல்லில் மாத்திரமல்ல செயலிலும் கூடவா நிருபித்துவிட்டீர்கள். இன்று உலகிலுள்ள சகல உயிரினங்களையும் இசைவிப்பது இசை. அவ்விசையினைக் காதின்மூலம் உணர்த்தும் வடிவம் சங்கீதம். அந்தச் சங்கீதத்தில் புராதன காலத்தில் தேவலோக வாத்தியமாக திருநந்தி தேவரின் கரங்களில் மிளிர்ந்து சிவபெருமானின் காதினை இனிமையடையச் செய்தது மிருதங்கம் எனப்படும் வாத்தியக் கருவியாகும். இங்கே மிருதங்கம் எனப்படுவது "மண்ணைத் தனது அங்கமாகக் கொண்டது என்பது பொருள். இதன் பொருள் பட இப்பூவுலகினில் தலைசிறந்த மிருதங்க வித்துவானாகப் புகழ் பெற்று மண்ணிலுள்ளவர்களை மகிழ்வித்ததோடல்லாமல், உங்களுக்கும் இறைவனுக்குமிடையுள்ள ஈர்ப்பு வலிமை காரணமாக ஈர்ப்பு வலியுநவில் இறைவன் உங்கள் உயிரைத் தமது சேவகர்களைத் திடீரென அனுப்பிப் பெற்றுத் தாமும் தேவலோகத்தில் உங்களது மிருதங்க இசையைக் கேட்கும் நோக்கத்திற்காகவா உங்களை உவ்விடம் அழைத்தார்.

மேலும் நீங்கள் அண்மைக்காலங்களில் உரையாடும்போது மனித உடலின் தொழிற்பாடுகள், நோய்கள் ஏற்படும் விதம் பற்றியெல்லாம் கலந்துரையாடுவீர்கள். ஆனால் நீங்கள் இவ்வுலகைவிட்டு பிரியும் போதாவது உங்கள் நோய் பற்றி ஒன்றுமே தெரிவிக்க மறுத்துவிட்டீர்களே. இதனையெல்லாம் ஒருகணம் நினைக்கும் போதெல்லாம் எங்கள் உடலுறுப்பெல்லாம் ஒரு சில நிமிடங்கள் தொழிற்பா

டற்று, மௌனாஞ்சலி செலுத்தி கண்ணீரைச் சுரக்கத் தூண்டுகி றது.

நீங்கள் உங்கள் வாழ்க்கைக் காலத்தில் உங்கள் பெயர் குறிப்பிடுவதற்கிணங்க (சங்கரசிவம்=சங்கரன்+சிவம்) மற்றவர்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் சுகத்தினைச் செய்தவராகவும் அன்புடையவராகவும் சுமார் நாற்பத்தொன்பது ஆண்டுகள் வரை வாழ்ந்துள்ளீர்கள். ஆண்டவன்கூட உங்கள் பொன்விழாவினை இவ்வுலகத்தினர் காணாதுதான் கொண்டாடுவதற்காகவா உங்களை அழைத்தான். நீங்கள் உங்களின் வாழ்க்கையின் இலட்சியங்கள் நிறைவேற வேண்டுமென்பதற்காக இணுவை மண்ணில் ஒரு சில வாரங்கள் தங்கியிருந்தது எல்லாம் எம் மனக்கண்களில் இன்றும் ஊசலாடிக் கொண்டுதான் இருக்கின்றது. நீங்கள் உங்கள் ஆக்க நூலான மிருதங்கம் (சுருக்க விளக்கம்) என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள பழமொழிக்கமைய (சுடர் விளக்காயினும் தூண்டிவிடல் வேண்டும்) உங்கள் மகனின் கல்வியில் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பது நாம் கண்கூடாகக் கண்ட உண்மையாகும். மேலும் நீங்கள் பாடங்களில் மகனுக்குச் சந்தேகங்கள் ஏதாவது நேர்ந்தால் என்னிடம் தெளிவுபடுத்தும்படி கூறிய வாக்கியங்கள் எல்லாம் என் மனதை அமைதியடையச் செய்து கண்ணீர் பெருக்கெடுக்கத் தூண்டுகிறது உங்களின் விருப்பத்திற்கமைய நானும் எங்கள் குடும்பத்தினரும், மற்றும் சகல உறவினர்களும் எல்லா வகையான உதவிகளையும் செய்து உங்கள் ஆத்மாவினைச் சாந்தியடையச் செய்வோம் என்று உறுதி மொழி கூறி உங்களைப் போன்ற நல்லவர்களையெல்லாம் ஆண்டவன் இம் மண்ணில் மீண்டும் படைத்து மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென்று, கேட்டுக் கொண்டு எங்களின் இந்தக் கண்ணீர்மல்கிய இரங்கலுரையைப் பூர்த்தி செய்து கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வணக்கம்

ஆக்கம்-வி. எஸ். குமரகுரு (Dip-in-Agric)
இணுவில்



இசைத்துறையின் ஊற்றெென வர்ணிக்கப்படும்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த

# இரங்கற் செய்தி

நான் அளவு கடந்த வேதனையுடன் எழுதக் கைகூட நடுங்குமளவில் எழுதுகிறேன். நமது யாழ்ப்பாண சோதனைக்குமேல் சோதனையாக பல இன்னலும் மனவேதனையும் அடைந்துள்ள நேரத்தில் காட்டு முயல் போல் வளர்ந்துவரும் நமது கலைச் செல்வங்கள் அழிந்து வருவதும், மடிந்து வருவதும் கேட்கப்படிக்க என்ன செய்வது என்றே தெரியவில்லை. எனது மிருதங்கப் பணியைப் பரப்ப பலப் பல மாணவமணிகளை ஆசிரிய மணிகளாக உருவாக்கினேன். அந்த வகையில் மயிலிட்டி ப. சின்னராசா அவர்களும் ஒருவராவார் என்பதைப் பெருமையுடன் எழுதிக் கொள்கிறேன். அரகேற்றப்பட்டுப் பின் என்னிடமும் சில காலம் படித்த ஆசிரியர் சங்கரசிவம் அவர்களது திடீர் மரணம் வளரும் மிருதங்கப்பகுதிக்கு பேரிழப்பாகும்.

வட இலங்கைச் சங்கீத சபை மிருதங்கப் பகுதிக்கு இவர் தயாரித்த புத்தகம் அந்தச் சபைக்கு இவர் நடுவராக கடமை புரிந்தமை எல்லாவற்றிற்கும் மேலாக அடக்கம், அன்பு, பணிவுடன் வாழ்ந்தமை எல்லாம் நான் நேரில் பார்த்து மகிழ்ச்சியடைந்தவன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லை ஆடலரசனை வணங்கி அவரது பிரிவால் துயருடைய குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
A. S. இராமநாதன்
மிருதங்க விரிவுரையாளர்
இசைத்துறை,
அண்ணாமலைப்பல்கலைக் கழகம்
தென் இந்தியா.

7 - 6 - 88

திரு. முத்துக்குமாரு - விஜயரகுநாதன் - கணக்காளர்

கல்வித் திணைக்களம்

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்கள்

அவர்கள்

## வழங்கிய இரங்கலுரை

அமரர் கந்தையா சங்கரசிவம் அவர்கள் தமிழ் ஆசிரியராக ஆசிரிய உலகில் புகுந்து தன்னுடைய விடா முயற்சியினாலும், ஊக்கத்தினாலும் நுண்கலை பயின்று மிருதங்க ஆசானாக உயர்வு பெற்றவர். அவர் எப்போதும் இன்முகம் காட்டி வரவேற்கும் பண்பாளர். யாரையும் மனம் நோகாது எல்லோருடனும் அன்பாகவும் விசுவாசமாகவும் பழகும் குணாளன். நண்பர்கள், சுற்றத்தாரையும் எப்போதும் நேசிப்பவர். தன் மாணாக்கரை என்றும் அரவணைத்துக் கற்பிப்பவர். நானும் ஆரம்பக் கல்வியின்போது இவரது மாணவனாக இருந்து அன்னாரின் அன்பையும் பூரண ஆசியையும் பெற்றவன்.

இணுவையூர் செகராஜ சேகரப்பிள்ளையாரையும் இணுவைக் கந்தனையும் தொழுதெழுபவர். அவர் சங்கீத மாணவர்களுக்கென்று மிருதங்கம் என்னும் அரிய நூலை வெளியிட்டவர். இவரின் திடீர் மறைவு பிறந்த மண்ணாம் இணுவைக்கும், புகுந்த மண்ணாம் உடுப்பிட்டிக்குமல்ல, சங்கீத உலகிற்கே பேரிழப்பாகும். அவரின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு என்றும் நிலைத்திருக்கும்.

பிறப்பவர்கள் யாவரும் இறப்பது இறைவன் நியதி· ஆயினும் அன்னாரின் மறைவு எல்லோரையும் துக்கத்தில் ஆழ்த்துகிறது. அவர் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

10-6-88 இங்கனம்

இணுவில் மு. விஜயரகுநாதன்



## பெருமக்கள் அஞ்சலி!

1. அன்பால் எம்மை அரவணைத்து — நல்
அறிவால் எம்மை வியக்கவைத்து
பண்பால் எம் மனம் கவர்ந்து — கொண்ட
பாசத்தால் பின்னிப் பிணைந்து — மனத்
திண்மையால் காரியத் திறமை படைத்து – அத்
திறமையால் எதிலும் புதுமை விளைத்து
அண்மையில் இவ்வுலகை நீத்த
அருமைச் சித்தப்பாவே எம் அஞ்சலிகள்

2. பெற்றெடுத்த தந்தையைப்போல் பாசம் கொண்டீர்
பெறற்கரிய பேறெனவே எமக்கு வந்தீர்,
உற்ற மனக் கவலைகட்கு ஆறுதல் தந்தீர்
உண்மையோ டுழைத் துலகில் உயர்ந்து நின்றீர்,
பற்றறுத்த முனிவனைப்போல், பாசம் கொண்ட
பாலகனைப் பரிதவிக்க விட்டுச் சென்றீர்,
மற்றவொரு பிறப்பில்கூட எங்கு காண்போம்,
மனக் கவலை தீர்ந்திடாது: அழுதே வாழ்வோம்!

3. நினைக்கையில் நெடிதுயர்ந்து நிற்கும் உருவம் — அவர்
நெஞ்சிலே துளிகூடக் கிடையாது கர்வம்,
அனைவரும் சமமென்று மதித்திடும் தர்மம் — காட்டும்
அன்பிலே இங்கு ஈடில்லை எவரும்
சினத்தின் வசப்படா சிந்தனை உள்ளம் — மலர்ச்சி
சிரிப்பின் வசீகரம் நெஞ்சினையள்ளும்
மனத்தினிற் கொண்ட மாசற்ற ஒழுக்கம் என்றும்
மற்றையோருக்குப் பாடம் புகட்டும்

### தேற்றம்

வற்றிய குளத்தின் மீன்களென
வாடித் தவிக்கும் மனைவி, மகன்
பற்றிய துடுப்பினை விட்டு விட்ட
படகினைப்போல ஆனாரன்றோ
உற்றவர், உறவினர் ஆன நாமும்
உள்ளத்தால் ஒன்றிணைந்தவர் தாமும்

பெற்றிட்ட கவலையைப் பகிர்ந்து கொண்டு,
பிரார்த்திப்போம், அன்னாரின் சாந்திக்காக

5. கற்றறிந்த மாந்தரென்ன, கயவரென்ன
கடவுள் தம் அடிபோற்றும் பக்தரென்ன
பற்றறுக்க முடியாது உலகமெங்கும்
பரந்து வாழும் பல கோடி மக்களென்ன,
சற்றேனும் விலகிட முடியாதன்றே
சாவெனும் விதியின் பிடியினின்று
ஏற்றும் இறைவன் மலரடியில் — அவர்
என்றும் சுகம்பெற இறைஞ்சிடுவோம்

ஆக்கம்

ந. பாலமுரளி கிருஷ்ணா, இணுவையூர்

சிவபதமெய்திய தமது மாணுக்கருக்காக
குருநாதர் அவர்கள் வழங்கிய

# இரங்கற் செய்தி

திரு. க. சங்கரசிவம் ஆசிரியர் அவர்கள் அன்பும், பண்பும், அறிவும் மிக்க ஒரு நல்லாசிரியன் ஆவார் எனது மிருதங்க மாணவர்களுள் இவர்தான் எனது முதல் மாணவன் என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்

படிக்கும் காலத்தில் அடக்கம், பொறுமை, முக்கியமாகக் குரு பக்தி நிறைந்தவராக இருந்தார். இவரிடம இயல், இசை, அறிவு மிகுந்து காணப்பட்டது.

இலங்கையில் ''மிருதங்கப் பாடப் புத்தகம்'' ஒன்றினை முதலில் எழுதி வெளியிட்ட பெருமையும் இவருக்கே உரியது.

பரீட்சகராகவும் கல்வி நிறுவனங்களின் இசைப் போட்டிகளைத் தயார் செய்வதிலும் இவர் மிகவும் ஈடுபட்டிருந்தார்.

மிருதங்கத்தில் ஆசிரியராகப் பத்திரம் பெற்றதோடு இணுவிலில் முதலில் தனது மிருதங்க அரங்கேற்றத்தையும் செய்து தனது ஊருக்கும் பெருமைதேடிக் கொடுத்துள்ளார். இவர் பெருமைகள் அனந்தம்.

அன்னாரின் திடீர் மறைவு கேட்டு ஆறாத்துயருறும் அவரின் உறவினருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இணுவில் சண்முகப் பெருமானை இறைஞ்சுகிறேன். அவரின் ஆத்மா சாந்தி அடைக.

இங்கனம்
க. ப. சின்னராசா
மிருதங்க விரிவுரையாளர்



1972-ம் ஆண்டு நடைபெற்ற
திரு. க. சங்கரசிவம் ஆசிரியர் அவர்களது
மிருதங்க அரங்கேற்றத்தின்போது தமது குருநாதர்களுடன்
தோன்றும் காட்சி.

இணுவையூர் மக்கள் சார்பில் கலைஞர் அவர்களின்

# இரங்கற் கவிதை

காற்றில் கலக்கும் — உன் கைவிரல் நாதம்! தேன்
ஊற்றாய்ச் சுவைக்கும் உன்கீதம் — சிறை பிடிக்கும்
ஆற்றல் எமக்கில்லையே என்றிறங்கும் வேளையிலே,
காற்றில் புகையாயுன் கவின் மேனி — கரைந்ததனை
எப்படி நாம் தாங்க? எப்படி நாம் — மறப்பதடா?

கொப்பளிக்கக் கண்கள் குருதியினைக் — கண்ணீராய்
அழுதோம் அழுதோம் அழுகின்றோம் — அழுகின்றோம்!
உழுதே எம் நெஞ்சை உன் நினைவு — கொல்லுவதேன்?
நீ செய்த உதவிகளை நினைத்தே சிலர் அழுதோம்!
நீ சகித்த கொடுமைகளை நினைததே சிலர் அழுதோம்!

நீ தந்த கல்வியினை நினைத்தே சிலர் அழுதோம்!
நீ கொண்ட நட்புணர்வை நினைத்தே சிலர் அழுதோம்!
எங்களுக்காய் அழுததனை எண்ணிச் சிலர் அழுதோம்!
பங்கெடுத்தோம் துயர்தீர்த்த பணிக்காய்ச் — சிலர் அழுதோம்!
நிலத்தின் பொறைகூட நீதான் — கொடுத்திருப்பாய்!

சிலைக்குள் தெய்வீகம் நீயேதான் சேர்த்திருப்பாய்!
மலருக்குள் வாசம் நீயேதான் — சேர்த்திருப்பாய்
நிலவுக்குள் தண்மை நீயேதான் — செய்திருப்பாய்!
மானுடத்திக் கென்று வகுப்புற்ற — பண்பெல்லாம்
தானுடுத்திக் கொண்ட சங்கரன் நீ சிவமனாய்

தான் பிறந்த வீடு தான் பிறந்த சுற்றத்தார்
தான் பிறந்த சூழல் தான் பிறந்த ஊர் தம்மை
காயவிட்டு, வேற்றூர் கமழ்விக்க எண்ணாத
தூயமலர்க் கொத்தே! — துடிப்போடு எங்கெங்கும்
நாதவிளக்கேற்றி நலஞ் செய்த உன் கரங்கள்

கீத விளக்கேற்றி கிளர்வித்த — உன் மிடறு
இன்றுவரை எங்கள் இணுவையினை — மறக்கவில்லை!
நன்றியுனக்கிந்த நறுங்கலை மண் — சாற்ற
என்றும் மறக்காது! எடுக்கும் — விழா உனக்கு!
இன்றும் என்றும் எம்மோடே — நீ வாழ்வாய்

எவ்விணுவைக் கந்தன் ஏசல் நீ — பாடுவையோ!
அவ்விணுவைக் கந்தன் அடியில் — தினங்காண்போம்!
எங்கு சென்றீரோ — சாமீ? எனப்பாடும்
துங்க அயில் வேலன் சுடர் ஏசல் — உன் பாட்டை
உன்னை நினைத்து எம் — ஊர் பாட ஓடிய நீ
இன்னும் இருப்பாய் இங்கே.

யாழ் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்

பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்
ஆசிரியர்
இணுவில்

திரு. R. சண்முகேஸ்வரன் ஆசிரியர் B. Sc. (Sri Lanka)
(பளை மகா வித்தியாலயம்)

## வழங்கிய இரங்கலுரை

ஆசிரியர் திருவாளர் க, சங்கரசிவம் அவர்களது திடீர் மறைவு எனக்கு மிகவும் அதிர்ச்சியையும், பெரும் கவலையையும் கொடுத்தது. அவர் எங்கள் உறவினரும் கிராமவாசியும் கூட அவர் எங்களுடன் பழகும்போது மிகவும் அன்பாகவும் தமாஷாகவும் பழகுவார். அவரது பிரிவு எங்களை எல்லாம் மிகவும் ஆழ்த்துயரில் ஆழ்த்தி உள்ளது.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

நன்றி

இணுவில்

### திருவாசகம்

கண்களிரண்டும் அவன்கழல்கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களிகூர் தரு பாடலோடாடல் பயின்றிடு மாகாதே
பாண்டி நன்னாடுடையான் படையாட்சிகள் பாடுதுமாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.

நரர்யணபிள்ளை - கந்தையா + தம்பிராசா அன்னப்பிள்ளை (பாக்கியம்)

நல்லையா (ஆசிரியர், ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)
+
இரத்தினேஸ்வரி (காலஞ் சென்ற ஆசிரியை)
↓
திருமதி சண்முகப் பிரியா கனகசுந்தரம் (சங்கீத ஆசிரியை)
சண்முகப் பிரபு (NORWAY)
சோதி சொரூபிணி (NORWAY)
ஹம்சானந்தி
பாலமுரளி கிருஷ்ண

ஆச்சியம்மா
+
செல்லத்துரை (சோதிடர்)
↓
ஜெயசோதிவரதன் (சமூகக்கல்வி ஆசிரியர்)
ஆனந்தவரதன் (U.K,)
ஜெயக்குமாரன் (FRANCE)
குமரகுரு
கந்தவேள் (CANADA)

குகனேஸ்வரி
B.A. Lond) (அதிபர்) முல்லை/ஒட்டிசுட்டான் அ. த. க. பாடசாலை முத்தையன் கட்டு)

பராசக்தி
(ஆசிரியை யாழ்/இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயம்)
+
சந்திரசேகரி (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்)
முருகதாஸ் (U.K.)

அமரர் சங்கரசிவம்
(ஆசிரியர் — மிருதங்க வித்துவான், கம்பர் அ. த. க. பாடசாலை கொம்மந்துறை வல்வெட்டித்துறை

சுப்பிரமணியம்
புகையிரத நிலைய அதிபர், புளியங்குளம்)
+
இரத்தினம்
↓
கல்யாணி
பகீரதன்
கமலினி

உமாதே
+
தவராஜா C.
↓
கிரிஜா

க(

ம்பிராசா அன்னப்பிள்ளை (பாக்கியம்)

வீரகத்திப்பிள்ளை கந்தை + யோக்கியம்

இணு
காச
யம்)

ரதம
திதர்)
K.)

அமரர் சங்கரசிவம்
(ஆசிரியர் — மிருதங்க
வித்துவான், கம்பர்
அ. த. க. பாடசாலை
கொம்மந்துறை
வல்வெட்டித்துறை

சுப்பிரமணியம்
புகையிரத நிலைய அதி
பர், புளியங்குளம்)
\+
இரத்தினம்
கல்யாணி
பகிரதன்
கமலினி

உமாதேவி
\+
தவராஜா C. O.
கிரிஜா

செல்லக்கண்டு
\+
இரத்தினம்மா

துரைச்சாமி

திருஞானம்
(MADRAS)

சகுந்தலை

திருமதி குணவதி
\+
சிவராசா

சாந்தி
கருணாகரன் (SWISS)
உமையாள்
திலீபன்

செந்தூரன்

திரு. R. சண்முகேஸ்வரன் ஆசிரியர் B. Sc. (Sri Lanka)
(பளை மகா வித்தியாலயம்)

## வழங்கிய இரங்கலுரை

ஆசிரியர் திருவாளர் க, சங்கரசிவம் அவர்களது திடீர் மறைவு எனக்கு மிகவும் அதிர்ச்சியையும், பெரும் கவலையையும் கொடுத்தது. அவர் எங்கள் உறவினரும் கிராமவாசியும் கூட அவர் எங்களுடன் பழகும்போது மிகவும் அன்பாகவும் தமாஷாகவும் பழகுவார். அவரது பிரிவு எங்களை எல்லாம் மிகவும் ஆழ்ந்துயரில் ஆழ்த்தி உள்ளது.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

நன்றி

இணுவில்

### திருவாசகம்

கண்களிரண்டும் அவன்கழல்கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களிகூர்தரு பாடலோடாடல் பயின்றிடு மாகாதே
பாண்டி நன்னாடுடையான் படையாட்சிகள் பாடுதுமாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.

# நன்றி நவிலல்

இளம் வயதாய் இருந்தாலும் நிறை வாழ்வு வாழ்ந்து எல்லோரையும் அதிர்ச்சியிலும், ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தி திடீரென சிவனடி எய்திய திருவாளர் க. சங்கரசிவம் (ஆசிரியர்) அவர்களது இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்தோருக்கும், எங்கள் துயரத்தில் பங்குகொண்டோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியும், மாலைகள் சூட்டியும் கௌரவித்து, இறுதி அஞ்சலி செலுத்திய கம்பர்மலை அ. த. க. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மற்றும் வந்து கலந்து ஆறுதலளித்த ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், மிருதங்கம் பயிலும் மாணவர்களுக்கும், உறவினர்களுக்கும், ஆறுதலளித்த அயலவர்களுக்கும் இரங்கலுரை வழங்கிய ஏனைய அன்பர்களுக்கும், இம்மலரைச்சிறந்த முறையில் அச்சேற்றி வழங்கிய நீண்டகாலத் தொடர்புடைய யாழ்ப்பாணம் நாமகள் அச்சகத்தினருக்கும், எங்கள் மனம் நிறைவான நன்றி நவிலலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வணக்கம்

இங்ஙனம்

திருமதி சகுந்தலை சங்கரசிவம் (மனைவி)

ச. செந்தூரன் (மகன்)

நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்